# 2 சிறுவர் பாதுகாப்பு மற்றும் குடும்பச் சட்டம்

ஒன்ராறியோவில் உள்ள பெண்களுக்கான குடும்பச் சட்டம்



## அனைவரும் பெண்கள். ஒரு குடும்பச் சட்டம்.

### உங்கள் உரிமைகளை அறிந்துகொள்ளுங்கள்

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# சிறுவர் பாதுகாப்பு மற்றும் குடும்பச் சட்டம்

*இந்தக் கையேடு சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவிக்கு இணையான ஒரு மாற்றீடாக இது இருக்கமாட்டாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை எதிர்கொள்கின்ற ஒருவராக நீங்கள் இருந்தால், உங்கள் உரிமைகளைக் காப்பதற்காக முடிந்தளவுக்கு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டறிவது மற்றும் அவருக்குக் கட்டணம் செலுத்துவது பற்றிய மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு, www.onefamilylaw.ca என்ற எமது இணையத்தளத்தில் இருக்கும் "உங்கள் குடும்பச் சட்டப் பிரச்சினைக்கு உதவி பெறுதல்" என்ற எமது கையேட்டைப் பாருங்கள்.*

ஒன்ராறியோவில், *சிறுவர், இளையோர் மற்றும் குடும்பச் சேவைகள் சட்டம்* (*"CYFSA"*) என்பது சிறுவர்களின் சிறந்த நலன்கள், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை ஊக்குவிக்கும் சட்டமாகும்.

சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான சேவைகள் சிறுவர்களை மையமாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதை *CYFSA* அங்கீகரிக்கிறது. சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான சேவைகள், குழப்பங்கள் குறைவான செயல்திட்டங்கள் பற்றிச் சிந்திக்க வேண்டும், அத்துடன் சிறுவர்களுக்கு நிலையானதொரு சூழல் தொடர்ந்திருப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

அமைப்புரீதியான இனவாதம், பாகுபாடு போன்றவையும் மேலாண்மை செய்யப்பட வேண்டும் என்பதையும் *CYFSA* அங்கீகரிக்கிறது.சிறுவர்கள் மற்றும் குடும்பத்தினருக்கான சேவைகள் யாவும் பன்முகத்தன்மையையும் மனித உரிமைகளையும் மதிக்க வேண்டும், அத்துடன் சிறுவர்களின் இனம், கலாச்சாரம், பாலினம் மற்றும் ஏனைய தனிப்பட்ட பண்புகளைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

பாதுகாப்புத் தேவைப்படும் 18 வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு உதவுவதற்காக சிறுவர் நல அமைப்புகளுக்கு அரசாங்கம் நிதியளிக்கிறது. இந்த முகவர் அமைப்புக்கள் பெரும்பாலும் சிறுவர் உதவி சபைகள் (CAS) அல்லது சிறுவர் மற்றும் குடும்பச் சேவைகள் (Child and Family Services) என்று அழைக்கப்படுகின்றன. துன்புறுத்தல் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிப்பது, வழிகாட்டுதல்களை வழங்குவது, குடும்பங்கள் ஒன்றாக இருக்க உதவுவது, மற்றும் விதிவிலக்கான சம்பவங்களின்போது, பிள்ளைகளை அவர்களின் வீடுகளிலிருந்து விலக்குதல் ஆகியவை CAS இன் பங்காகும். CAS பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான பராமரிப்பை வழங்குகிறது, வளர்ப்புப் பெற்றோர் பராமரிப்பு மற்றும் தத்தெடுத்தலுக்கு உதவுகிறது, அத்துடன் குடும்பங்களுக்கு ஆதரவை வழங்குகிறது.

ஒரு பெற்றோர் என்ற வகையில், உங்கள் பிள்ளையை ஆபத்திலிருந்து பாதுகாப்பதும், உணவு மற்றும் தங்குமிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை அவருக்கு வழங்குவதும் உங்களின் சட்டரீதியான கடமையாகும். இதனை நீங்கள் செய்யவில்லை என்று நம்புவதற்கான காரணம் ஏதாவது CASக்கு இருந்தால், உங்களின் குடும்பத்தை அது விசாரிக்கலாம்.

பிள்ளை ஒருவர் **பாதுகாப்புத் தேவையான நிலையில்** இருக்கின்றாரா என்பதைத் தீர்மானிப்பதற்காக குறித்த விதிமுறைகளையும் நடைமுறைகளையும் CAS பின்பற்ற வேண்டும். புலன்விசாரணை ஒன்றை முடித்த பின்னர், அடுத்த படிமுறைகள் என்ன என்பதை CAS தீர்மானிக்கும். அவர்கள் உங்களின் குடும்பத்துடன் தொடர்பிலிருக்கத் தேவையில்லை என்று CAS முடிவு செய்யலாம் அல்லது ஆதரவுக்காக சமூக நிறுவனமொன்றுக்கு உங்களின் குடும்பத்தைப் பரிந்துரைக்கலாம்.

உங்கள் பிள்ளை பாதுகாப்புத் தேவையான நிலையில் இருக்கிறார் என்றும், வீட்டில் அந்தப் பிள்ளையைப் பாதுகாக்க முடியாது என்றும் CAS நம்பினால், உங்கள் வீட்டிலிருந்து உங்கள் பிள்ளையை விலக்கி அவரை ஒரு குடும்பத்துடன், சமூக அங்கத்தவருடன் அல்லது வளர்ப்புப் பெற்றோருடன் விடக்கூடும்.

## "பாதுகாப்புத் தேவையான நிலை" என்றால் என்ன?

ஒரு பிள்ளை பாதுகாப்புத் தேவையான நிலையில் இருக்கிறார் என்பதை *CYFSA* பின்வருமாறு விபரிக்கிறது.பின்வருமாறு அவர் இருப்பதை இது உள்ளடக்குகிறது:

- தனியாக விடப்படுகிறார், கவனிக்கப்படவில்லை அல்லது புறக்கணிக்கப்படுகிறார்;
- துன்புறுத்தப்படுகிறார் அல்லது துன்புறுத்தப்படக்கூடும்;
- வளர்ந்தவர்களுக்கு இடையேயான துன்புறுத்தல் அல்லது வன்முறையை அந்த வீட்டில் பார்க்கிறார்.

துன்புறுத்தல் என்பது உடல்ரீதியான, பாலியல்ரீதியான மற்றும் உணர்ச்சிரீதியான துன்புறுத்தல்களை உள்ளடக்குகிறது. *CYFSA* இன் கீழ், பராமரிப்பாளர் என்பது பிள்ளை ஒருவரைப் பராமரிப்பதற்குப் பொறுப்பாக இருக்கும் வளர்ந்தவர்கள் அனைவரையும் உள்ளடக்குகிறது. எந்தப் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர் பிள்ளையைத் துன்புறுத்துகிறார் என்பது முக்கியமல்ல.நீங்கள் உங்களின் பிள்ளையைத் துன்புறுத்தாவிட்டாலும்கூட, துன்புறுத்தல் பற்றி உங்களுக்குத் தெரிந்திருந்ததா, அல்லது அதைப் பற்றி நீங்கள் அறிந்திருந்து, அதைத் தடுக்க முயற்சிக்கவில்லையா என்றெல்லாம் CAS விசாரிக்க முடியும்.

*CYFSA* இன் கீழ்,18 வயதுக்கு குறைவானவான ஒருவர் சிறுவர் என வரையறுக்கப்படுகிறார். இருந்தாலும், 16 அல்லது 17 வயதுடைய பிள்ளை ஒன்றின் தொடர்பில் CAS இடையீடு செய்யும்போது, அந்தப் பிள்ளை தன்னார்வ ஒப்பந்தமொன்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் (ஒப்புதல்). அந்தப் பிள்ளையின் ஒப்புதல் இல்லாமல் 16 அல்லது 17 வயதுப் பிள்ளை ஒருவரை வீட்டிலிருந்து விலக்க முடியாது.

## குடும்பங்களுடன் CAS எவ்வகையில் சம்பந்தப்படுகிறது?

பிள்ளை ஒருவர் பாதுகாப்புத் தேவையான நிலையில் இருக்கிறார் என்று நம்புபவர் எவராயினும் CASக்கு அது பற்றிச் சொல்ல வேண்டும். இது **அறிக்கை செய்ய வேண்டிய கடமை** என்று அழைக்கப்படுகிறது.

சிறுவர்களுடன் பணிபுரியும் தொழில்முறை வல்லுநர்கள் எவருக்காவது 16 வயதிற்குட்பட்ட பிள்ளை ஒருவர் துன்புறுத்தப்படுகிறார் அல்லது புறக்கணிக்கப்படுகிறார் என்ற சந்தேகம் இருந்தால் அவர்கள் CASஐக் கட்டாயமாக அழைக்கவேண்டும். ஆசிரியர்கள், மருத்துவர்கள், சமூக சேவையாளர்கள், மதத் தலைவர்கள் மற்றும் சிறுவர் காப்பகப் பணியாளர்கள் இதில் அடங்குகின்றனர். CASக்கு அவர்கள் அது பற்றி அறிவிக்காவிட்டால், அவர்கள் மீது குற்றம்சுமத்தப்படலாம்.

அந்தப் பிள்ளை 16 அல்லது 17 வயதுடையவராக இருந்தால், துன்புறுத்தல் பற்றி CASக்கு அவர் அறிவிக்க விரும்புகிறாரா என்பதை அந்த நிபுணர் தீர்மானிக்கலாம். இந்த வயதினர் பற்றி அறிக்கை செய்யவேண்டியது கட்டாயமானதல்ல.

அறிக்கை செய்யவேண்டிய கடமை **முடிவற்றது**. இதன் கருத்து என்னவென்றால், துன்புறுத்தலைப் பற்றி ஏற்கனவே ஒருவர் புகாரளித்திருந்தாலும்கூட, பின்னர் எப்போதாவது

அந்தப் பிள்ளை துன்புறுத்தப்படுவதாக அல்லது புறக்கணிக்கப்படுவதாக அவர்கள் நினைத்தால் அதுபற்றி அவர்கள் அறிவிக்கவேண்டும்.

உதவிக்காக நீங்களும் CAS ஐ அழைக்கலாம்.

*குடும்ப வன்முறை மற்றும் CAS*

நீங்கள் துன்புறுத்தப்படுகிறீர்கள் அத்துடன் காவல்துறையினரும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் எனில், CAS கூட உங்கள் வீட்டிற்கு அழைக்கப்படலாம். சிலவேளைகளில் துன்புறுத்தப்படும் பெண்கள் CASஆல் விசாரிக்கப்படுகிறார்கள். வயதுவந்தோருக்கு நிகழும் துன்புறுத்தல் பிள்ளையின் பாதுகாப்பையும் நல்வாழ்க்கையையும் பாதிக்கிறது என்ற அக்கறையால் CAS இதைச் செய்கிறது. CAS விசாரணைகளின்போது பிள்ளையின் சிறந்த நலன்களே முக்கியமாக உள்ளன.

CAS பணியாளர் ஒருவர் உங்கள் வீட்டிற்கு வந்தால், உங்களிடமும் உங்கள் பிள்ளையிடமும் அவர்கள் கேள்விகளைக் கேட்பார்கள். துன்புறுத்தல் பற்றி அந்தப் பணியாளர் உங்கள் துணைவருடனும் பேசக்கூடும்.

ஆபத்திலிருந்து உங்களின் பிள்ளையைப் பாதுகாப்பதற்கு நீங்கள் செய்யவேண்டியதைச் செய்யவில்லை என்று CAS உணர்ந்தால், நீங்கள் துன்புறுத்துபவராக இருக்காவிட்டாலும்கூட உங்கள் பிள்ளையை வீட்டிலிருந்து அவர்கள் விலக்கக்கூடும். உங்களுக்கான சிறந்த தெரிவுகள் எவை என்பதைக் கண்டறிவதற்கு வழக்கறிஞர் ஒருவருடன் பேசுவது மிகவும் முக்கியமாகும்.

## CAS சம்பந்தப்படும்போது என்ன நடக்கும்?

### படிமுறை 1: மதிப்பீடு

எவராவது CAS க்கு அழைப்பு விடுக்கும்போது அல்லது அறிவிக்கும்போது, பிள்ளைப் பாதுகாப்புக்கான பணியாளர் ஒருவர் ஆரம்ப மதிப்பீடு செய்வார். உங்கள் குடும்பத்துடன் CAS சம்பந்தப்பட வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்காக அந்தப் பிள்ளைப் பாதுகாப்புப் பணியாளர் அந்த அறிக்கையை ஆராயும் சில நடவடிக்கைகளை எடுப்பார் என்பதே இதன் பொருள் ஆகும். உங்களின் பிள்ளை நன்கு கவனித்துக் கொள்ளப்படுகிறாரென CAS திருப்தியடைந்தால், மேலதிக நடவடிக்கைகள் எதையும் எடுக்கத் தேவையில்லை என்று அந்த நேரத்தில் அது சிலவேளைகளில் முடிவுசெய்யும். சமூகத்தில் இருக்கும் சேவைகளுடன் உங்களின் குடும்பத்தைப் பிள்ளைகளைப் பாதுகாக்கும் பணியாளர் இணைக்கவும் கூடும்.

### படிமுறை 2: புலன்விசாரணை

மதிப்பீட்டின் (படிமுறை 1) பின்னர், புலன்விசாரணை ஒன்றை மேற்கொள்வதற்கு CAS முடிவெடுக்கக்கூடும். அப்படி முடிவெடுக்கப்பட்டால், CAS உங்கள் வீட்டிற்கு வருகைதந்து, உங்களுடன், உங்கள் துணைவருடன் மற்றும் உங்கள் பிள்ளையுடன் பேசுவார்கள். ஏனைய குடும்ப உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் அயலவர்கள் போன்ற குடும்பத்துக்கு வெளியே உள்ளவர்களையும் CAS நேர்காணல் செய்யக்கூடும்.

CASஆல் விசாரிக்கப்படுவது என்பது மிகவும் பாரதூரமானது. அவர்களின் கரிசனைகளை நீங்கள் தீர்க்காவிடில், உங்களின் பிள்ளை பாதுகாப்பாக இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதிக ஈடுபாட்டை CAS காட்டக்கூடும். CASஇன் நியாயமான கோரிக்கைகளுக்கு ஒத்துழைக்கிறீர்கள் மற்றும் பிரச்சினைகளைக் கையாள முயற்சிக்கிறீர்கள் என்பதைக் காட்டும் நடவடிக்கைகளை எடுக்க

வேண்டியது அவசியமாகும். எனினும், உங்களுக்குச் சட்டரீதியான உதவி தேவையெனில் வழக்கறிஞர் ஒருவருடன் பேசுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது.

விசாரணைகளின் முடிவில், உங்களின் பிள்ளைக்குப் பாதுகாப்புத் தேவையில்லை என்று CAS முடிவு செய்யக்கூடும். அப்படி நடந்தால், வேறு எந்தப் படிமுறைகளையும் அது எடுக்கமாட்டாது.

### படிமுறை 3: சேவை ஒப்பந்தங்கள் அல்லது நீதிமன்ற அணுகை

உங்களின் பிள்ளை பாதுகாப்புத் தேவையான நிலையில் இருக்கிறார் என்று CAS முடிவு செய்தால், உங்கள் பிள்ளை பாதுகாப்பாக இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அது எடுக்கும். உங்களின் பிள்ளையை உங்கள் வீட்டில் தங்க வைப்பதற்காக, பிரச்சினைகளைக் கையாளும் முயற்சியாக நீதிமன்றத்திற்கு வெளியே உங்கள் குடும்பத்தினருடன் செயல்படலை (தன்னார்வத்துக்குரியது) இந்தச் செயல் உள்ளடக்குகிறது.

குடும்பங்களுடன் நீதிமன்றத்திற்கு வெளியே CAS செயல்படும்போது, உங்களின் பிள்ளை பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக நீங்கள் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகளை உள்ளடக்கும் ஒரு **தன்னார்வச் சேவை ஒப்பந்தத்தில்** கையெழுத்திடும்படி அது உங்களைப் பெரும்பாலான நேரங்களில் கேட்கும்.

வீட்டுக்கு வருகை, பிள்ளை வளர்ப்புப் பற்றிய கற்கைகள், கவுன்சலிங் அல்லது போதைப்பொருள் சோதனை போன்ற சேவைகளை ஏற்றுக்கொள்வதையும் தன்னார்வச் சேவை ஒப்பந்தமொன்று உள்ளடக்கலாம்.

**தற்காலிகப் பராமரிப்பு ஒப்பந்தம்** ஒன்றில் கையெழுத்திடும்படி CAS உங்களைக் கேட்க முடியும். இது பிள்ளையின் பராமரிப்பு மற்றும் அணுகையை CAS 6 மாதங்கள் வரைக்கும் வைத்திருப்பதற்கு அனுமதிக்கும். 12 வயதுக்கு மேற்பட்ட பிள்ளை எனில் அவர் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தன்னார்வச் சேவை ஒப்பந்தம் அல்லது தற்காலிகப் பராமரிப்பு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடும்படி உங்களிடம் கேட்கப்பட்டிருந்தால், அந்தப் பத்திரத்தில் கையெழுத்திடுவதற்கு முன்பு சட்டரீதியான ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது மிகவும் முக்கியமாகும். கையொப்பமிடுவதற்கு முதல் சட்டரீதியான ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள உங்களால் முடியவில்லையெனில், அதன் பின்பாவது முடிந்த விரைவில் நீங்கள் சட்டரீதியான ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

CASஐச் சந்திக்கும்போது உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால், உடனடியாக அவர்களுக்கு அதைச் சொல்லவேண்டும். சந்திப்புக்களின்போது உங்களுக்குத் துணையாக ஒருவர் இருத்தல் போன்ற, வேறு ஏதாவது மேலதிக உதவிகள் உங்களுக்குத் தேவைப்பட்டால் அவற்றையும் நீங்கள் CASக்குச் சொல்லவேண்டும்.

ஒப்பந்தம் ஒன்றில் நீங்கள் கையெழுத்திட்டிருக்கிறீர்கள், ஆனால் அந்த நிபந்தனைகளைப் பின்பற்றவில்லை என்றால் உங்கள் வீட்டிலிருந்து உங்கள் பிள்ளையை CAS விலக்கமுடியும்.

ஒப்பந்தம் ஒன்றில் நீங்கள் கையெழுத்திட்ட பின்னர், உங்களின் பிள்ளை பாதுகாப்பாக இருக்கிறார் அத்துடன் நன்கு கவனித்துக் கொள்ளப்படுகிறார், மற்றும் நீங்கள் ஒப்பந்தத்தை பின்பற்றுகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக பொதுவாக CAS உங்களின் குடும்பத்தினருடன் தொடர்பில் இருக்கும்.

## பிள்ளையை விலக்குதல்

உங்கள் பிள்ளைக்குப் பாதுகாப்புத் தேவையாக இருக்கிறது என்றும் உங்கள் பிள்ளையைப் பாதுகாப்பாக வைத்திருக்க வேறு வழியில்லை என்றும் CAS முடிவு செய்திருந்தால், உங்கள் பிள்ளையை வீட்டிலிருந்து விலக்கலாம் அல்லது அவர்களின் பாதுகாப்பின் கீழ் வைத்திருக்கலாம்.

அப்படி நடந்தால், உடனடியாகச் சட்டரீதியான ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவும்.

ஒரு பிள்ளையை வீட்டிலிருந்து விலக்கிய ஐந்து நாட்களுக்குள் CAS கட்டாயமாக நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டும். இது **பிள்ளையைப் பாதுகாக்கும் விசாரணையின் முதல் கட்ட விசாரணை** எனப்படும்.

உங்களின் பிள்ளையை வீட்டிலிருந்து அவர்கள் விலக்கியவுடன் சட்டரீதியான ஆலோசனையையும் பிரதிநிதித்துவத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். பொதுவாக, முதல் விசாரணையின்போது, வழக்கறிஞர் மற்றும் ஆதாரங்கள் பெற்றோரிடம் இல்லையெனில், CASஇன் ஆதாரங்களின் அடிப்படையில் ஒரு ஆரம்ப உத்தரவை நீதிமன்றம் வழங்கக்கூடும், அத்துடன் ஒரு வழக்கறிஞரைப் பெற்றோர் பெற்றுக்கொள்வதற்காக வழக்கை இன்னொரு திகதிக்குப் பிற்போடும்.

முடிந்தளவு விரைவாக வழக்கறிஞர் ஒருவரை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். உங்களின் பக்கக் கதையை நீங்கள் சொல்லக்கூடிய விசாரணை ஒன்றுக்காக வழக்கை எவ்வாறு திட்டமிடலாமென அவர்கள் உங்களுடன் கலந்துரையாடுவார்கள்.

அந்தப் பிள்ளை எங்கு தங்கவேண்டும் என்பது பற்றி உங்களுக்கும் CAS க்கும் இடையில் ஒரு உடன்பாடு வரவில்லை என்றால், நீங்கள் விசாரணை (நியாய விசாரணை) ஒன்றைக் கோருவதற்கு உங்களுக்கு

உரிமை இருக்கிறது. பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பான விசாரணையில் ஐந்து சாத்தியமான முடிவுகள் இருக்கின்றன.

- **நிராகரித்தல்** என்றால், பிள்ளைக்கான பாதுகாப்புத் தேவையாக உள்ளது என்ற உத்தரவு தேவையில்லை என நீதிமன்றம் தீர்மானித்தல்.
- **மேற்பார்வை உத்தரவு** என்றால், பெற்றோர், குடும்பத்தவர் அல்லது சமூக உறுப்பினர் ஒருவரின் வீட்டில் பிள்ளை தங்குவார், ஆனால் அவரை மேற்பார்வை செய்வதில் CAS சம்பந்தப்பட்டிருக்கும். அந்தப் பராமரிப்பாளர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் சில இருக்கக்கூடும்.
- **சிறுவர் உதவிச் சபையின் இடைக்காலப் பராமரிப்பு** என்றால் வரையறுக்கப்பட்ட காலத்துக்குப் பிள்ளை CAS இன் பாதுகாப்பில் இருப்பதற்கான உத்தரவு ஆகும் (வளர்ப்புப் பெற்றோர்).
- சிறுவர் உதவிச் சபையின் **நீட்டிக்கப்பட்ட பராமரிப்பு** என்றால் பிள்ளை நிரந்தரமாக CAS இன் பாதுகாப்பில் இருப்பதாகும், அத்துடன் அந்தப் பிள்ளை தத்தெடுக்கப்படவும் கூடும்.
- **பாதுகாப்பு உத்தரவு** என்றால், பெற்றோர், உறவினர் அல்லது சமூக உறுப்பினர் ஒருவர் பிள்ளையின் பாதுகாப்புப் பொறுப்பாக இருத்தல் ஆகும்.

பெற்றோரிடம் அவர்களின் பிள்ளையை மீளக் கொடுக்கமுடியாவிட்டால் அந்தப் பிள்ளை நெருங்கிய உறவினர்களுடன் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை *CYFSA* வலியுறுத்துகிறது

உங்கள் வீட்டிலிருந்து உங்கள் பிள்ளை

விலக்கப்பட வேண்டுமானால் அந்தப் பிள்ளையை குடும்ப அங்கத்தவர் அல்லது சினேகிதருடன் தங்கவைக்குமாறு நீங்கள் கேட்க முடியும்.அந்தப் பிள்ளையை அந்த நபரால் பராமரிக்க முடியுமா என்பதைத் தீர்மானிப்பதற்காக அந்த நபரின் வீட்டை CAS மதிப்பீடு செய்யவேண்டும்.

உங்கள் பிள்ளை தங்குவதற்கு பொருத்தமானவர் ஒருவரும் இல்லையென்றால், ஒரு வளர்ப்புப் பெற்றோரை அல்லது குழுவாக வாழும் வீடு ஒன்றை CAS தேடும்.

சிலவகையான துன்புறுத்தல்களும் குற்றங்கள் ஆக இருக்கின்றன.ஒருவர் உடல்ரீதியான அல்லது பாலியல்ரீதியான துன்புறுத்தலை எப்போதாவது செய்கிறார் எனில் அது பற்றிக் காவல்துறைக்குப் புகார் செய்யவேண்டும் என்ற கொள்கைகள் CAS அலுவலகங்களில் உள்ளன. துன்புறுத்தலைப் பற்றி காவல்துறை விசாரிப்பதுடன் குற்றவியல் குற்றச்சாட்டுகளை முன்வைக்கக்கூடும். பிள்ளைக்கான பாதுகாப்பு வழக்கு விசாரணைகளைத் தவிர குற்றவியல் வழக்கு விசாரணைகளும் நடக்கும். குற்றவியல் குற்றச்சாட்டுகள் பிள்ளைக்கான பாதுகாப்பு வழக்குகளை நீக்குவதில்லை. உங்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தால் உடனடியாக குற்றவியல் வழக்கறிஞர் ஒருவரிடம் சட்டரீதியான ஆலோசனையை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## பிறந்தவுடன் பாதுகாப்பில் எடுத்தல்

உங்கள் பிள்ளையின் பாதுகாப்புத் தொடர்பாக குறிப்பிடத்தக்க கரிசனைகள் இருந்தால், உங்கள் குழந்தை பிறக்கும்போதே CAS அதனை எடுத்துச் செல்லலாம். வேறு எந்த நேரத்திலும் செய்வதைப் போல, இந்த நடவடிக்கையை எடுப்பதற்கு CASக்கு சந்தேகமற்ற கரிசனைகள் இருக்க வேண்டும்.

உதாரணத்துக்கு, பின்வரும் காரணங்களினால் உங்கள் பிள்ளையின் பாதுகாப்புத் தொடர்பாக CASக்குக் கரிசனைகள் இருக்கலாம்:

- உங்களுடைய மற்றப் பிள்ளைகள் CASஆல் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள்;
- உங்களுக்குப் பாரதூரமான போதைப் பொருள் மற்றும் மதுபானப் பிரச்சினை இருக்கிறது;
- நீங்கள் வதிவிடம் அற்றவர் அல்லது பாதுகாப்பற்ற சூழலில் வசிக்கிறீர்கள்; அல்லது
- உங்களின் உணர்ச்சிரீதியான மற்றும் மன ஆரோக்கியம் உள்ளடங்கலாக வேறு வகையான நிலையற்ற தன்மை.

## சுருக்கம்

பிள்ளைப் பாதுகாப்புத் தொடர்பான நடைமுறைகள் அல்லது விசாரணைகள் சிக்கலானவை. அவை விரைவாக நகர்பவை. உங்கள் பிள்ளை எடுத்துச்செல்லப்பட்டால், ஐந்து நாட்களுக்குள் அந்தப் பிரச்சினையை ஒரு நீதிபதிக்கு முன் CAS கொண்டு வரவேண்டும்.

தற்காலிக அடிப்படையில் வளர்ப்புப் பெற்றோரின் பராமரிப்பில் ஒரு பிள்ளை எவ்வளவு காலம் இருக்கமுடியும் என்பதற்கான மிகக் கடுமையான காலவரிசைகளும் உள்ளன. 6 வயதுக்குட்பட்ட பிள்ளைக்கு அதிகபட்சக் காலம் 12 மாதங்கள் ஆகும். 6 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள பிள்ளைக்கு அதிகபட்சக் காலம் 24 மாதங்கள் ஆகும். கால அவகாசம் முடிந்ததும், நீதிமன்றம் அந்தப் பிள்ளையைப் பெற்றோரிடம், சமூக அங்கத்தவரிடம் அல்லது குடும்ப அங்கத்தவரிடம் மீளக் கொடுக்கவேண்டும், அல்லது அந்தப் பிள்ளையை சிறுவர் உதவிச் சபையின் நீட்டிக்கப்பட்ட பாதுகாப்பின் கீழ் கொண்டுவர வேண்டும்

(தத்தெடுக்கப்படலாம்).

இதனால்தான் உங்களால் முடிந்தளவு விரைவில் சட்டரீதியான ஆலோசனையை நீங்கள் பெறுவது மிகவும் முக்கியமாகும், அப்படியானால் உங்கள் பிள்ளை உங்களிடம் திரும்பி வருவதற்கு என்ன நடக்கவேண்டும் என்பதை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

**உங்கள் பிள்ளை CASஆல் எடுத்துச் செல்லப்பட்டால், உடனடியாகச் சட்டரீதியான ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்**. பிள்ளைகள் பாதுகாப்புச் சட்டத்தில் அனுபவம் உள்ள வழக்கறிஞர் ஒருவரை கண்டறிவதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். Legal Aid Ontario அல்லது Justice Netஐ அழைப்பதன் மூலம் நீங்கள் அதை ஆரம்பிக்கலாம்.

Ontario

The Law Foundation of Ontario
Building a better foundation for justice in Ontario

*நீங்கள் ஒன்ராறியோவில் வாழும் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு.*

*பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவல்களை www.onefamilylaw.ca அல்லது “http://www.undroitdefamille.ca” www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## குடும்பச் சட்டம் பற்றிய விடயங்கள் கிடைக்கின்றன*

1. முரண்பாட்டுக்கான மாற்றீட்டுத் தீர்வு மற்றும் குடும்பச் சட்டம்
2. **பிள்ளைப் பாதுகாப்பு மற்றும் குடும்பச் சட்டம்**
3. பிள்ளைக்கான உதவித் தொகை
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம்
5. பிள்ளைப் பாதுகாப்பு மற்றும் அணுகல்
6. குடும்ப ஒப்பந்தங்கள்
7. குடும்பச் சட்ட நடுநிலைமை
8. குடியேறிய, அகதிநிலை மற்றும் தகுதிநிலையற்ற பெண்கள் பிரச்சினைகளுக்கான குடும்பச் சட்டம்
9. உங்களுடைய குடும்பச் சட்டப் பிரச்சினைகளுக்கான உதவியைக் கண்டறிதல்
10. குடும்பச் சட்டத்தில் சொத்து பிரிக்கப்படும் விதம்
11. திருமணம் மற்றும் விவாகரத்து
12. துணைவருக்கான ஆதரவு (TML 012)

** இந்தக் கையேடு பல வடிவங்களில் கிடைக்கிறது. மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்: www.onefamilylaw.ca. உங்களுடைய குடும்பச் சட்ட உரிமைகளை அறிந்துகொள்ள உதவும் மேலதிக ஆவணங்களையும் இந்த இணையத்தளத்தில் நீங்கள் கண்டறியலாம்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

The Law Foundation of Ontario

Funded by:/Financé par:
Ontario